**கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனம் 2023 சனவரி 01 முதல் 2023 பெப்ரவரி 28**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் 2023 பெப்ரவரி 28 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2023 சனவரி 01 முதல் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிறுவனத்தின் 2023 சனவரி 01 முதல் 2023 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த இரண்டு மாதங்களுக்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 கவனம் செலுத்த வேண்டிய விடயங்கள்**

கணக்கீடு கொள்கையின் கீழ் குறிப்பு இலக்கம் 1.7 இல் காண்பிக்கப்பட்ட பிரகாரம் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனம் 2023 மார்ச் 01 ஆம் திகதி முதல் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பீடமொன்றாக ஸ்தாபிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் கல்வி அமைச்சரின் அங்கீகாரம் மற்றும் பரிந்துரையுடன் 2023 பெப்ரவரி 13 ஆம் திகதிய இலக்கம் 2319/22 என்ற அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத்

தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிறுவனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் நிறுவனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவனத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிறுவனத்தின் நிர்வாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் நேரில் முறையில் தயாரிக்க வேண்டிய காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் ஆண்டின் போது பொருள் விற்பனையால் கிடைத்த ரூபா 28,628 பதியப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டு காலத்திற்குரிய கிடைக்க வேண்டிய ரூபா 673,848 வட்டித் தொகையில் கிடைக்கப்பெற்ற வட்டியாக பதியப்பட்டிருந்தது. அவ்வாறே தொழிற்படு மூலதனச் சீராக்கத்தின் கீழ் முற்கொடுப்பனவாக சீராக்க வேண்டிய பெறுமதி பூச்சியமாக இருந்த போதும் ரூபா 629,957 பெறுமதி குறிப்பிடப்பட்டுள்ளது. | குறைபாடுகளைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் சரியான காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 24 வருட காலம் முதல் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் மாணவர் விடுதி நடாத்திச் செல்லப்படுகின்ற நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குரிய கட்டிடத்துடன் 0.1765 ஹெக்டேயர் காணி இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அதில் காணப்படுகின்ற 03 வகைகளுக்குரிய நிலையான சொத்துக்களின் 158 விடயங்களை பெறுமதியிட்டு அலுவலக உபகரணங்களின் கீழ் மூலதனமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இலவச கையளித்தல் பத்திரம் மூலம் உள்நாட்டு மருத்துவ நிறுவனத்திற்கு கையளிப்பதற்கு நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் மற்றும் காணி கையளிப்பதற்கு 2022.03.09 ஆம் திகதி மேல் மாகாண கௌரவ ஆளுநரின் இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்கள் யாவும் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 14 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமையின் காரணமாக 2023 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றின்படி இழிவுப் பெறுமதி பூச்சியமான கிரயம் ரூபா 33,080,665 ஆன நூலகப் புத்தகங்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்கள் இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 44 ஆம் பந்தியின் படி பெறுமதி தீர்மானிப்பதற்கு வசதியீனமான சொத்துக்களான நூலகப் புத்தகங்களின் பெறுமதியைத் தீர்மானித்தல் அல்லது பயன்தரு ஆயுட்காலத்தைத் தீர்மானித்தல் மிகவும் வசதியீனமான நடைமுறையற்ற வகையில் இருந்தமையால் அவற்றை மீள் மதிப்பீடு செய்வதற்கு அல்லது கணக்கு கூற்றுக்களில் பதிவதன் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென 2019 இன் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2022 இன் போது முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ள நூலகப் புத்தகங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் நூலகப் புத்தகங்களை மீள் மதிப்பீடு செய்து ஏனைய பல்கலைக்கழகங்களில் அமுல்படுத்தப்படுகின்ற முறைமையினைக் கண்டறிந்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் 07 இன் 65 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள், உபகரணங்களின் இழிவுப் பெறுமதி மற்றும் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் 12 மற்றும் 93 ஆம் பந்திகளின் பிரகாரம் அறிக்கையிடல் நிருவனத்திற்கு கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய பொருளாதார நலன்கள் அல்லது சேவைகள் சாத்தியவள ஆய்வுகளில் சீராக்கப்பட்ட சகல வருமானங்களும் இனங்காண வேண்டியிருந்த போதிலும் 2023 பெப்ரவரி 01 ஆம் திகதி திடைத்த ரூபா 3,050,000 ஆன ஆராய்ச்சி மானியம் நிறுவனத்தின் வருமானமாக கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பேராசிரியர் மருத்துவர் ஹெரபத்தெனிய அவருக்கு ஆராய்ச்சிக்காக செலவிடப்பட்ட இந்த தொகை நிறுவனத்தின் வருமானமாக எடுக்கப்படவில்லை. சனவரி மற்றும் பெப்ரவரி என்ற இரண்டு மாதங்களில் இந்த தொகையில் செலவினங்கள் செய்யப்படவில்லை. எதிர்காலத்தில் கணக்காய்வினால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 11 இன் பிரகாரம் வருமானமக இனங்காணப்படல் வேண்டும். |
| (உ) | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 20 இன் 118 ஆம் பந்தியின் கிரயம் ரூபா 5,339,763 ஆன | தற்போது கற்பனைச் சொத்துக்கள் தனியாக நிதி சொத்துக்களின் வகுப்பாக | இலங்கைப் பொதுத்துறை கணக்கீட்டு |

| | | |
|---|---|---|
| கற்பனைச் சொத்துக்கள் தனியான சொத்து வகுப்பொன்றாக நிதி நிலைமைக் காண்பிப்பதற்கு பதிலாக கணனி மற்றும் அச்சிடல் இயந்திரங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தின் போது தனியான சொத்து வகுப்பாக நிதி நிலைமைக் கூற்றில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் கணக்கு வைத்தல் வேண்டும். |

**1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 சனவரி 01 முதல் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்காக செலுத்த வேண்டிய ரூபா 3,508,314 கூட்டுத்தொகையான செலவினம் நிதிக் கூற்றுக்களில் கைவிடப்பட்டிருந்தது. | கணக்காய்வினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களில் பெறுமதிகளுக்கிடையே ரூபா 3,722,760 பெறுமதி அட்டுறு பதிவேட்டில் உள்ளடக்கப்படும். | காலப் பகுதிக்குரிய சகல செலவினங்களும் கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | முதலீட்டுக்காக கிடைத்த வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம் 2023 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய முதலீட்டு வட்டி ரூபா 518,610 இனால் அதிகரித்தும் காசு மீதி ரூபா 565,556 இனால் குறைத்தும் நிதிச் செயலாற்றல் கூற்றில் முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 46,945 குறைத்தும் காண்பிக்கப்பட்டிருந்தது. | முதலீடு தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக இணங்குகின்றோம். 2023.12.31 இல் கணக்குகளில் சரியான பெறுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முதலீட்டு வட்டி வருமானம் சரியான இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.7.1 செலுத்த வேண்டிய பணம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய பரீட்சை கடமைகளுக்காக செலுத்த வேண்டிய ரூபா 81,785 கணக்காய்வுத் திகதியான 2023 திசெம்பர் 07 ஆம் திகதி வரையும் தீர்த்து வைக்கப்பட்டிருக்க வில்லை. | தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய மீதிகளை விரைவாக தீர்த்துவைத்தல் வேண்டும். |

## 1.8 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | புரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 396 | செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத ரூபா 76,651 கூட்டுத்தொகையான 26 இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் தொடர்பாக தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 394 இன் பிரகாரம் அந்த காசோலைகளுக்குப் பதிலாக வேறொரு காசோலையொன்று விநியோகிக்கப்படாதிருக்குமா யின் மாத்திரம் சாசோலை இரத்துச் செய்யப்படும். உரிய காசோலை இரத்துச் செய்யப்படுதல் நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் ஆகும். அதாவது மீண்டும் கோரப்படுமாயின் செலுத்துவதற்காக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ள கணக்காக காசோலை இரத்துச் செய்தல் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. | காலாவதியான கொடுப்பனவுக ளுக்கு சமர்ப்பிக்கப்படா த காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 396 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 772 மற்றும் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 10/2022 மற்றும் 2022 செப்டெம்பர் 09 ஆம் திகதிய சுற்றறிக்கை | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளில் இனங்காணப்பட்ட முரண்பாடுகள் மற்றும் விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் முரண்பாடுகள் மற்றும் விற்றுத் தீர்ப்பதற்குரிய | நிதிப் பிரமாணம் 772 மற்றும் 2022.09.09 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 10/2022 இன் பிரகாரம் மேற்கூறப்பட்ட 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது உடைந்த பொருட்களாக இனங்காணப்பட்ட பொருட்களை விற்றுத் தீர்ப்பதற்காக அரசாங்கத் தொழிற்சாலை மற்றும் புகையிரத களஞ்சிய திணைக்களத்துடன் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த பொருட்களை விற்றுத்தீர்த்து அவற்றை மீள் சுழற்சி | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளை இனங்காணப்பட்ட முரண்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் விற்றுத்தீர்க்க வேண்டிய நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட ல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருக் கவில்லை. | செய்வதற்காக தேவையான தொழில்நுட்பம் அந்த திணைக்களத்திடம் இல்லாதிருந்ததாக எங்களுக்கு 2023.02.27 ஆம் திகதிய கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. உரிய பொருட்களை விற்றுத்தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (iii) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் 3 ஆவது பட்டோலை மற்றும் 1978 இன் திசெம்பர் 19 ஆம் திகதிய இலக்கம் 842 என்ற திறைசேரி சுற்றறிக்கை | நிலையான சொத்துப் பதிவேடு உள்ளகக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்த முடியுமான பிரகாரம் தொடர்புடைய நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க பேணிச்செல்ல வேண்டியிருந்த போதிலும் அதற்கு முரணாக ஒவ்வொரு ஆண்டிற்காகவும் தனித்தனியான பதிவேடு பேணிச்செல்லப்பட்டிரு ந்ததுடன் காணிகளின் விபரங்கள் அதில் உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்து பதிவேட்டு மென்பொருள் முறைமை ஊடாக மேற் கொள்ளப்படுகின்றது. அந்தந்த ஆண்டுகளின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்காக அச்சிடப்பட்ட பிரதிகள் பெறப்பட்டுள்ளன. காணிகள் விபரங்களும் அதனுடன் உள்ளடக்கப் பட்டுள்ளது. | நிலையான சொத்துப் பதிவேடு உள்ளகக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தக்கூடிய வகையில் தொடர்புடைய நிதிப்பிரமாணங் களுக்கு இணங்க பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | **சுற்றறிக்கை** | | | |
| (i) | 2023 சனவரி 18 ஆம் திகதிய இலக்கம் BD/HRD/126/2/14/19/2023 என்ற திறைசேரி செயலாளரால் கல்விச் செயலாளருக்கு முகவரியிடப்பட்ட சுற்றறிக்கை கடிதம். | பிணை முறிகளை மீறியதன் அடிப்படையில் அறவிடப்படுகின்ற பணம் கிடைத்தவுடன் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கவேண்டி இருந்த போதிலும் அதற்கு முரணாக பிணைமுறி மீறலின் அடிப்படையில் அறவிடப்பட்ட ரூபா 4,230,939 ஆன தொகை நிதி குழுவின் அங்கீகாரத்தின் | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 737 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய சுற்றறிக்கை கடிதத்தின் பிரகாரம் பிணைமுறி மீறலின் அடிப்படையில் அறவிடப்பட்ட பணம் கிடைத்தவுடன் அரசாங்க வருமானத்தில் செலவு வைக்கப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அடிப்படையில் நிலையான வைப்பில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ii) | 2018 மார்ச் 19 ஆம் திகதிய இலக்கம் 01/2018 என்ற சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | 2021 ஆம் ஆண்டின் போது வாகன விற்பனையால் கிடைத்த ரூபா 1,327,500 தொகை திறைசேரிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2022.01.24 ஆந் திகதி நடைபெற்ற 486 ஆவது முகாமைத்துவ சபைக் கூட்டத்தின் போது உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனம் தனியான சட்டத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட சுயாதீன நிறுவனம் ஒன்றானதன் காரணமாக மோட்டார் வாகன விற்பனைப் பணம் நிறுவனத்தின் நிதியத்தில் சேர்க்கப்பட்டு பயன்படுத்துவதற்கு பொருத்தமாக இருந்ததாக முகாமைத்துவ சபை தீர்மானத்திருந்தது. | தொடர்புடைய சுற்றறிக்கையின் பிரகாரம் வாகன விற்பனையில் இருந்து கிடைக்கின்ற பணம் திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டும். |

**1.9 நிதி முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறுவனத்தால் பேணிச்செல்லப்படுகின்ற 04 வங்கி நடைமுறைக் கணக்குகளில் காணப்பட்ட மிகைப்பணம் “Money Market” முதலீட்டுக் கணக்கின் கீழ் Over Night Deposit இன் கீழ் 2019 செப்டெம்பர் 17 ஆம் திகதி முதல் முதலீடு செய்யப்பட்டு 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 7,463,524.73 வட்டியொன்று உழைக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் அந்த முதலீட்டுக் கணக்கில் (வங்கி உறுதிப்படுத்தலின் பிரகாரம்) ரூபா 22,718,252 சாதகமான மீதியொன்று காணப்பட்டது. இந்த முதலீட்டு திட்டத்திற்காக 2020 யூலை 30 ஆம் திகதி தேசிய வரவு செலவுத் திட்ட திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும் கணக்காய்வு திகதியான 2023 மே 22 ஆம் திகதி வரையில் அதற்கான அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | மிகைப் பண முதலீட்டுக் கணக்கில் ரூபா 22,718,252 ஆக சாதகமான மீதியொன்று வங்கிக் கணக்கின் நான்கு வங்கிக் கணக்குகளும் முதலீடு செய்யப்பட்ட பணத்துடன் உள்ள மீதியாக காண்பிக்கப்பட்டுள்ளது. | அரசாங்கத்தின் நிதியை முதலீடு செய்வதற்காக திறைசேரி அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிறுவனத்திற்குச் சொந்தமான 10.08 பேர்ச் பகுதி 2014 ஆம் ஆண்டில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு விற்பனை செய்யப்பட்டு கிடைத்த பணம் 2013 யூன் 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் படி உள்நாட்டு மருத்துவ நிறுவனத்திற்கு மாற்றுவதற்கு மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மாதாந்தம் பணத் தேவைகளுக்காக அந்த பணத்தை ஈடுபடுத்த வேண்டியிருந்த போதும் நிறுவனத்தின் நிதிக் குழுவின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இரண்டு நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2023 பெப்ரவரி 28 இல் உள்ளவாறு முதலீட்டுக் கணக்கின் மீதி ரூபா 16,407,211 ஆக காணப்பட்டது. | உரிய தொகையில் ஒரு பகுதி நிறுவனத்திற்கு பேரூந்து வண்டி ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கும், நிறுவனத்தின் விரிவுரை மண்டபத்தை நிர்மாணிப்பதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மிகுதித் தொகையும் நிறுவனத்தின் பழைய அரைப் பகுதி பூர்த்தி செய்யப்பட்ட நிலையான நிரந்தர கட்டிடத்தின் அபிவிருத்தி செய்வதற்காக இந்த ஆண்டில் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | உள்நாட்டு மருத்துவ நிறுவனத்தின் மாதாந்த நிதித் தேவைகளுக்காக அந்தப் பணம் ஈடுபடுத்தப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

2023 சனவரி 01 முதல் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையான காலப் பகுதிக்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 4,256,922 பற்றாக்குறையாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தின் ஆயுர்வேத மற்றும் யூனானி பாடநெறிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்கள் நிறுவனத்தை விட்டு செல்லும் சதவீதம் 19 சதவீதம் முதல் 27.5 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்ட போதிலும் அது தொடர்பாக கண்டறிந்து தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை. | 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் உள்நாட்டு மருத்துவ பீடத்தில் ஆயுர்வேதம் மற்றும் யூனானிகளைப் பின்பற்றுகின்ற மாணவர்கள் ஏனைய பட்டப்பாடநெறிகளில் ஈடுபடுதல், தனிப்பட்ட காரணத்தின் அடிப்படையில் பட்டப்பாடநெறிகளை இரத்துச் செய்த, பரீட்சைகள் சித்தியடையாமையின் காரணமாக அடுத்த வருடத்தில் பதிவு செய்து புதுப்பித்துக் கொள்ளாமை, பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கனிஷ்ட மாணவர் குழுக்களுடன் பட்டப்பாட நெறிகளைப் பின்பற்றுவதற்கு கோரியமையினால் பட்டப்பாட நெறிகளை கைவிட்டுச் செல்லல் மற்றும் காலம் தாழ்த்துதல் ஏற்பட்டிருந்தது. | உள்நாட்டு மருத்துவ விஞ்ஞான நிறுவனத்தில் ஆயுர்வேதம் மற்றும் யூனானி பாடநெறிகளை பின்பற்றுகின்ற மாணவர்கள் நிறுவனத்தை விட்டுச் செல்லும் சதவீதத்தை குறைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையினைக் கவனத்திற்கொள்ளாமல் கொள்வனவு செய்யப்பட்டதன் காரணமாக கொள்வனவு செய்து 04 வருடங்கள் முதல் 12 வருடங்களை விஞ்சிய பயன்படுத்துவதற்கு முடியாத ரூபா 128,063 பெறுமதியான ரிபன் மற்றும் டோனர் கணக்காய்வுத் திகதியான 2023 ஆகஸ்ட் 09 ஆம் திகதி வரையிலும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. | உரிய டோனர் வகைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | தேவையினைக் கவனத்திற் கொண்டு கொள்வனவுகள் மேற் கொள்ளப்படல் வேண்டும். |

**3.3 செயற்திட்டம் அல்லது மூலதன வேலைகளின் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஈடுசெய்யும் பங்களிப்பு தொழில்நுட்பம் (NERD Technology) இனைப் பயன்படுத்தி ரூபா 50 மில்லியன் ஆகக் கூடிய எல்லையின் கீழ் அரசாங்க நிறுவனங்களில் நிர்மாணித்தல் நடவடிக்கைகளுக்குரிய ஆலோசனைகள், திட்டமிடல் மற்றும் நிர்மாண செயற்பாடுகள் இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு கையளிப்பதற்குரிய 2017 ஆகஸ்ட் 01 ஆம் திகதிய இலக்கம் 17/1578/716/031 என்ற அமைச்சரவைத் தீர்மானத்தின் படி ரூபா 42,588,255 (வரியின்றி) மதிப்பீட்டு பெறுமதியின் கீழ் மூன்று மாடிகளையுடைய கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2021 திசெம்பர் 20 ஆம் திகதி இலங்கை தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்திற்கு (NERDC) நிர்மாணம் கையளிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக சமர்ப்பிக்கப்பட்ட வேலைத் திட்டத்தின்படி நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு 321 நாட்கள் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 522 நாட்கள் எடுத்ததன் காரணமாக மொத்த நிர்மாண ஒப்பந்த விலையின் முரண் ரூபா 26,607,210 தொகையை உள்ளடக்கி ரூபா 68,821,252 (வரியின்றி) செலுத்தப்பட்டிருந்தது. | முன்னர் நாட்டில் காணப்பட்ட நெருக்கடியான நிலைமை, நாட்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமை, கலவரங்கள் போன்ற சில சந்தர்ப்பங்களின் போது ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, நிர்மாண சேவைகளுக்குத் தேவையான பொருட்களின் பற்றாக்குறையின் காரணமாக இந்த உடன்படிக்கையின் படி உரித்தான 321 நாள் காலத்தை நீடித்து 150 நாட்களை உள்ளடக்கி 2023 ஏப்ரல் 06 ஆம் திகதி அந்த காலம் முடிவுறுத்தப்பட்டு பல்கலைக்கழகத்திற்கு கையளிக்கப்படல் வேண்டும். அதன் பிரகாரம் அத்திகதியின் பின்னர் உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வேலை பூர்த்தி செய்யப்பட்டு 2023 மே மாதம் 04 ஆம் திகதி கையளிக்கப்பட்டுள்ளது. | நிர்மாண நடவடிக்கைகளை விரைவுபடுத்தி பெறக்கூடிய பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |